



ஓலை 161| ஓசை 284| பிப்ரவரி 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



## ‘விவசாய கவிஞர்’ மருதகாசி

# கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது

## பொருள்

பிறர் சொல்லும் இனிய சொற்கள், இன்பம் தருவதை உணர்ந்தவன், பிறர்க்கும் தனக்கும் துன்பம் தரும் கடும் சொற்களைப் பேசுவது என்ன பயன் கருதியோ!?

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை
Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

# அகர முதல இலக்கியப் பேரவை

## வீரன் கேண்மை கூரம் பாகும்!

பாவகை : ஐந்தடித் தரவு கொச்சகக் கலிப்பா




முகிலுந்தான் மறவத்தால் முழுநட்பின் தென்றலாலே
அகிலத்தின் கூரம்பாய் அமுதமான மழையுந்தான்
மகிழ்வுடனே குத்தியேதான் மண்ணுலகின் வலிமையாகும்.
வகிடெடுத்தாற் போலவேதான் வளம்பெருக்க வெள்ளமோடும்;
அகிலமெல்லாம் கூரம்பாய் அரும்நட்பாய் ஆகிடுமே!

அருச்சுனனின் ஏகலைவன் தன்நட்பே கூரம்பு:
பெரும்சான்றோர் நட்பேதான் பெரிதுவக்கும் கூரம்பு;
அருங்கலைகள் மறவரவர் அரும்நட்பாய் ஆகிடுமே;
இருக்கின்ற காலமெல்லாம் இன்நட்பாய் விளங்குகுணம்,
அரும்பாது காப்பான ஆற்றலுடை கூரம்பாய் விளங்கிடுமே!

நன்னடத்தை நன்னுரைகள் நற்செயல்கள் நல்லுடம்பு
நன்பண்பு நல்நேயம் நன்கட்டுப் பாடுகளும்
பொன்னான மான்புடையோர் போற்றுகிற நட்பானால்,
துன்பமின்றி வாழுகின்ற துயர்களைந்து முன்னேறும்
நன்துணையாம் கூரம்பாய் நானிலத்தில் துளங்கிடுமே!

மறவர்தம் நட்பினையே மருவியோர்க்கோ அந்நட்பே
மறவமாகக் காக்கின்ற மாக்கூர்மை அம்பாகும்;
அறத்தினையே நட்பாக்க மறவரிடம் கொண்டதொரு
சிறப்புடைய அடைகாத்து சீருடனே காக்கின்ற
உறவாகக் கூரம்பாய் உதவிடுமே உணர்வோமே!





**இலக்கணக் குறிப்பு:**

இது ஐந்தடித் தரவு கொச்சகக் கலிப்பா. ஐந்தடியும் ஓரெதுகைப் பெற்று, அடி தோறும் முதல் சீரும் மூன்றாம் சீரும் பொழிப்பு மோனைப் பெற்று, எல்லாச் சீர்களுமே காய்ச் சீர்களாக வந்துள்ளன. அடிதோறும் நான்கு சீர்கள் பெற்றிருக்கும். காண்பதற்கு கலி மண்டிலம் போலவே இருக்கும். பெரும்பான்மையாக முதல் சீரை நிரையசையில் தொடங்கலாம். இயலா நிலையில் சிறுபான்மையாக முதல் சீரினை நேரசையில் தொடங்கலாம். இப்படி இரண்டு கலிப்பா நிரையசையில், இரண்டு கலிப்பா நேரசையில் தொடங்கப் பட்டுள்ளன. பெரும்பான்மையாகக் காய்ச் சீர்களாக வரும். ஈரசைச் சீர்களும் விரவி வரலாம். தளை பார்க்கத் தேவையில்லை. திறமுடையவர்கள் வெண்டளை கொண்டும் எழுதலாம்.

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

பாவகை : வஞ்சி விருத்தம்
காய் + காய் + காய்

ஆர்ப்பரிக்கும் கரைதனிலே அலைகளெலாம்
நீர்த்தெறிக்கும் வெளியினிலே நிவர்ந்திடுமாம்
வார்த்தைகளில் வடித்திடாத வடிவழகாம்
சேர்த்திசைக்கும் வளமெல்லாம் செவ்வியலாம்.



கவிஞர் செ. கலைவாணி

புயலில் சாய்ந்த
மரத்தைப் பார்த்து வருந்துகிறது
சீற்றம் தணிந்ததும் காற்று.
/
இரவு முழுக்க விழித்திருந்து
செய்த பகலில் கொஞ்சமும்
இருளில்லை.
/
எங்கிருந்து
தொடங்கியதென்று
தெரியவில்லை
சிற்றெறும்பின் பயணம்.
தற்போது
தென்னைமரத்தின்
மூன்றாவது குறுத்தோலையில்
அதனிருப்பு.
/
கவிதை இன்னும்
சொல்லி முடிக்கவில்லை.
நீ உறங்க வேண்டுமென்று
தற்போது விடைபெறுகிறேன்.
/
ஆக்கம் என்றெழுதி
உனது பெயரை
எழுதுவதொன்றே பாக்கி.
மற்றபடி நிறைவடைந்து விட்டது
கவிதை.
/



பறவையின்
உதிர்ந்த இறகு
காற்றில்
திசைமாறித் திரியவில்லை.
அது
இறகு தொலைத்த
பறவையைத் தேடி
அலைகிறது...!
/
உன் ஞாபகம் எழுந்ததும்
சிணுங்குகிறது
அலைப்பேசி.


கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# என் மாணவிகளே என் மகள்கள்



அன்பை அளவு கடந்து
அள்ளிக் கொடுப்பவர்கள்,

ஆர்வமாக என் சொற்களை
கேட்பவர்கள்,

இன் முகத்தோடு என்னை
வரவேற்பவர்கள்,

ஈடு செய்ய முடியாத அளவிற்கு
என்னை நேசிப்பவர்கள்,

உயிரோடு உயிராக
என்னை உறவாடுபவர்கள்,

ஊக்கமளிக்க எனக்கு அவர்களின்
உன்னத அன்பைக் கொடுப்பவர்கள்,

எல்லையில்லாத அன்பை
என்னுள் விதைப்பவர்கள்,

ஏழு கடலையும் மிஞ்சிடும்
இவர்களின் அன்பு கடல்,

ஐயமின்றி என்னிடம்
அயராத பாசத்தை விதைப்பவர்கள்,

ஒய்யாரமாக நின்று
என்னை வரவேற்பவர்கள்,

ஔவியம்(பொறாமை)
குணம் இல்லாமல் என்னை நேசிப்பவர்கள்,
என் மாணவிகளே என் மகள்கள்.

கவிஞர் பெ. சுரேகா, திண்டுக்கல்

# புதிய மலர்கள்

நந்தவனம் எங்கும்
மலர்களின் பாதயாத்திரை

மலர்ந்த பூக்களோ
தலை உயர்த்தி தன்னம்பிக்கையாய்

மொட்டுக்களின் சுகப்பிரசவம்
காலைநேர உற்சாகமாய்

ரோஜாக்களின் முகத்தில்
முட்களே முகவரிகளாய்

மலர்களின் கண்காட்சியில்
மனிதம் குழந்தைகளாய்

இது கவலைகள் தொலைக்கும்
வண்ணங்களின் மாநாடு

உதிர்ந்து போகும் மலர்கள்
மரணத்தின் மடியில்

புதிய மலர்களோ
சுகப்பிரசவத்தின் சுமையில்

மனிதனின் கரங்களில்
மலர்கள் என்றுமே
மகரந்த சேர்க்கையாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# நினைவின் கொடுமை

காலம் தூசியாய்
பறந்து ஓடுகிறது
காதல் காற்றாய்
மறைந்து போகிறது
எண்ணங்கள் மாறினாலும்
ஏக்கங்கள் குறையவில்லை
ஆசைகள் எல்லாம்
வெறுப்பாய் மாறி
துரத்தி கொண்டு இருக்கிறது
நினைவுகளின் உச்சம்
மனஉடைச்சல்
நிழலே நிஜம்.



கவிஞர் மா. மோனிஷா

# ஆழி

ஆழியில் பிறப்பெடுத்து
ஆழியிலே அறிதுயிலும்
அரிகரன் கை சேர்ந்த வெண்சங்கு!
தூய்மையின் சின்னம்!
அதர்மத்தை அழிக்க
தீயதை விலக்க பரந்தாமன்
விடுத்த சக்கரம்!
முதன்முதலில் உயிர் தோன்றிய
ஆழியின் மடியில் சுவாசிக்கும்
பல்லாயிரம் உயிரினங்கள்!
ஆழிப்பேரலையில் சிக்கி
புதையுண்டு போன நகரங்கள்!
ஆழியோடு புதைந்து போன ரகசியங்கள்!
ஆச்சர்யங்களும், அதிசயங்களும்
ஆழியுள் அடக்கம்!
இயற்கையின் சீற்றத்தோடு
போட்டியிட இயலாத மனித குலம்!
மனித குலத்தின் ஆக்கத்திற்கு
இயந்திரவுலகின் ஒப்புயர்வற்ற
கண்டுபிடிப்பான சக்கரம்!
உலகமும், மனித வாழ்க்கையும்
சுற்றிச் சுழல காரணமான சக்கரம்!
மனித வாழ்க்கை ஒரு வட்டம்!
சக்கரத்திற்குள் சுழன்று
ஆழிக்குள் அடங்கும்
ஆறறிவு மனிதம் தழைக்க!
அறத்தின் வழி நின்று
அகிலத்தைக் காத்திடுவோம்!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# சுட்ட மாங்காயும் சுடுசோறும்



அத்தமகனே அழகனே
அன்பான என்னவனே
ஆசைகளை வளர்த்தவனே
ஆனந்தம் தந்தவனே

இதயத்தை மகிழ்வித்தவனே
இருகரம் பற்றியவனே
ஈர்த்திட்ட மன்னவனே
ஈரமானது உள்ளமே

உன்னை எண்ணித்தான்
உறங்காமல் நானிருக்கேன்
ஊஞ்சலானது மனசு
ஊதக்காற்றில் நடுங்குது மேனி

எப்போது வருவீரோ
எண்ணத்தில் கலப்பீரோ
ஏங்குது நெஞ்சமே
ஏனிந்த வஞ்சமே

கட்டழகு கண்ணாளா
கட்டியணைக்க வாடா
ஆக்கி வச்சிருக்கேன் உனக்காக
சுட்ட மாங்காயும் சுடுசோறும்.

ருசியா சமச்சிருக்கேன்
ஆறிடுமுன்னே தின்னுமய்யா
வெரசா வாருமய்யா
பசி தீர சாப்பிடலாம்

ஒம்மேல ஆசையாச்சு
ஒதுங்கித்தான் போகலாமா
பார்வையாலே கவுத்திட்டியே
என்னால மறக்க முடியலியே

சமஞ்சுதான் நாளாச்சு
சஞ்சலத்த தீருமய்யா
நல்ல நாளும் பாருமய்யா
மஞ்சத்தாலி கழுத்துல கட்டுமய்யா

இப்போது இங்கே இருக்கு
சுட்ட மாங்காயும் சுடுசோறும்.
வந்தாக்க சந்தோசமாகும்
சிரிச்சு பேசிட தோதாகும்

ஒறவுக்காரி நாந்தானே
வெசனம் ஏதும் வேணாமய்யா.

கவிஞர் பெ. வெங்கடலட்சுமி காந்தன், விருதுநகர்

கங்காணி களம் புக
களவு போன காணி.
நிலம் நறுக்கும் நாற்கரம்
நொறுங்கி வீழும் களமர்.
அண்டர் திரள் சூழ
அடையாள மிழந்த கூடல் நகர்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# அந்தாதிக் கவிதை



உள்ளத்தின் ஆழத்தில் உறைந்த அழகை
அழகான எண்ணத்தில் அறிய இயலும்
இயன்ற அளவு இல்லார்க்கு ஈதல்
ஈகையின் பலனை இம்மையில் சேர்க்கும்
சேர்வார் நல்லாராயின் சேர்க்கை இனிக்கும்
இனிய நண்பர்களை இன்முகம் காட்டும்
காட்சியின் உயர்வு கண்களின் பெருமை
பெருமைப் பேற்றினை பெற்றவர்க்கு நல்கும்
நல்கிடும் உழைப்பால் நற்செல்வம் கிடைக்கும்
கிடைத்த வாய்ப்பு கிரீடத்தைத் தரும்
தருவதில் பின்வாங்காதே தர்மம் காக்கும்
காக்கும் உயிர்களால் காலன் அழிவான்
அழியா வரம் அதுவே உயர்வாம்
உயர்வான உள்ளல் உன்னத நிலையாம்
நிலையாமை உணர்தல் நினைவின் உயர்வாமவ்
உயர்வே வாழ்வின் ஒப்பற்ற பொருளாம்

கவிஞர் ஜமுனா ஜெகன். நாகர்கோவில்

# கடவுள் ஏன் கல்லானார்?

எல்லையற்ற பரம்பொருளை உருவில் காண
இச்சைகொண்டே சிலைதன்னில் வடித்தான் மனிதன் !

கற்சிலையில் உயிர்ப்புடனே இருந்த இறைவன்
கல்லென்றே உணர்வற்று இருகிப் போனான் !

பல்லுயிரை தம்உயிர்போல் காண்பார் இல்லை ;
பாசநேசம் இல்லறத்தில் இன்றில் லையே !

நல்லறத்தை மறந்திட்ட ஆட்சி யாளர் ;
நாநயமில் வாக்குறுதி ; தேர்தல் வேடம் !

ஊடகத்தார் பொய்யுரையில் மூழ்கிப் போனார் ;
உயர்ந்திட்ட மன்றங்கள் தீர்ப்பில் பிழைகள் !

கேடுகொண்டார் வன்புணர்ச்சி ; கொலையாம் குற்றம் ;
கீழ்மனத்தார் அதிகாரம் ; அஞ்சும் மக்கள் !

வாடிநின்றான் பிரகலாதன் ; தூணும் உடைய
வையமதிர் நரசிம்மம் வந்தார் போல

நாடுயர நன்மக்கள் நாளும் வாழ
நடுநடுங்கக் கல்பிளக்க நேரில் வாரீர் !



கவிஞர் ஆ ச கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

# சொல்லாத காதல்

மனதுக்குள்ளிருந்த காதல்
மஞ்சரியான நோதல்.

அறுத்துக் கொண்டே
அழுதும் ஆர்ப்பரிப்போடே.

நெஞ்சுக்குள் வேகும்
நெகிழியாய் வழியும்.

திங்களின் தண்ணொளியாய்
தின்னும் ஆதவனாய்.



திருவிழா இடிபாடுகளில்
திருதிருவென்றே குழந்தையாய்.

கனவுகளின் காட்சிகளில்
கரவொலி எழுப்பிடும்.

ஊனத்தின் உண்மையை
ஊமையான சோகமாக்கும்.

சிறகிழந்த பறவையின்
சிக்கலான ஆசையிலா

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# ஐ திணையில் ஓர் காதல்

அனிச்சம் பூவைச் சந்தித்த
அந்நொடியில்
மலர்ந்தது காதல்
குறிஞ்சியாக.

வெற்பின் நிழலில்
இளைப்பாறிய
காதல் மனம்.

"காத்திரு"
கொஞ்சம் எனக்காக
எனச் சொல்லி
சென்றது.

காதலை
எதிரில் பார்க்கும்
நாளை எதிர்நோக்கி நோக்கி.

கன்னி மனம்
அலர் மேல் படர்ந்தது
முல்லைக் கொடியாக

வருகை தாமதம் ஆக,
வஞ்சியோ
முகம் பொலிவிழந்து
மனம் வாடலாக

மணவாளன்
வந்தான்
ஊடல் கொண்டாள்,
"பிரிந்து போகாதே" என்றே

மழை தீண்டிட கரையும்
மண் மணமாய்
கரைந்தது
அவன் கூடலில் ஊடல்

கூடி இருந்த இணையோ
மீண்டும்
கூடு விட்டு வேறு இடம் போகவே

பிரிவு அது
ஆழிபோல நீள நீள
மீளா காதலில்
கரை சேரா பேதை ஒருத்தி

அலை அலையாய்
தீண்டும் துணையின்
நினைவில் நிலை மறந்து

அழுது அழுது
சிந்திய நீரும் வறண்டு
பாலை ஆனது விழிகள்




கவிஞர் க. கார்த்திகா மணிகண்டன், கோவை

# அழகும் அளவும்

முழங்கால் அளவிற்கு
எரியும் நெருப்பு அடுப்பிற்கு
தருவது அளவான அழகு.
அதுவே கூரை வரை போய்
ஊரை அழித்தால் அளவற்ற அழிவு.

உயரம் என்பது உயர்ந்த
எண்ணங்களின் உச்சம்.
வளர்ச்சியின் பரிணாமம்
என்றால் அது கர்வத்தின் எச்சம்.
மனையை மட்டும்
வாடகைக்கு விட்டால் லாபம்.
அளவுக்கு மீறி வாடகை
கேட்டால் அழியாத சாபம்.

வீட்டில் உள்ளவனும்
வாழ்கிறான் அளவான வாழ்க்கை.
வீதியில் உள்ளவனும்
வாழ்கிறான் அளவான வாழ்க்கை.
இருவருக்கும் வாழ்வின்
அளவுகோல் ஒன்றுதான்.
புரிந்து கொண்டால் நன்றுதான்.



ஒரே ஒரு முறை தான்
உள்ளே போய்
தெய்வமாய் மாறுகிறது கல்.
அங்கே வருடக்கணக்கில் உள்ளே போய்
மனிதனாய் மாறாத மனிதன்
ஒரு தீராத அவச்சொல்.
நிலத்தைப் பார்த்ததும்
வாங்க துடிப்பது அளவான ஆசை.
நீட்டிய நிலம் எல்லாம்
எனக்கு என்பது அளவற்ற பேராசை.

மரணத்தை மனதார வரவேற்க
விளக்கை வீட்டில் பூச்சி சுற்றுவதைப்போல்
பணத்தைச் சுற்றித்தான்
நீ வாழ்ந்து நிம்மதியை எரிக்க வேண்டுமா?

கவிஞர் முனைவர். அ. ச. மு. முனியாண்டி

# புத்தக காதல்

படைத்தவர் நெஞ்சம்
பருவப் பெண்ணாய்.
படைத்ததும் நெகிழ்வர்
பருகிடும் சுவையை!

படித்துப் பார்க்க
பழகிட வேண்டும்.
பழத்தால்; இன்பம்
பலநாள்; நிலைக்கும்!

எழுதியவர் எண்ணம்
ஏட்டினில் தெரியும்.
எழுதிட நினைத்தால்
எழும்பிடும் கருவில்!

காதல் அரும்பாய்
கவிநெஞ்சம் மலரும்.
காதலின் அருமை
காதலர் அறிவர்!

பெண்ணின் காதல்
பெண்மையின் சிறப்பு.
புத்தக காதல்
புடைப்புகளின் ஈர்ப்பு!

கவிதை புத்தகம்
காதல் சொல்;லும்.
கட்டுரைப் புத்தகம்
கலைபல கற்க!

நாவல் பழத்திட
நல்ல கதைகள்.
நமக்கு இன்பம்
நாளும் கிடைத்திடும்!



வரலாறு அறிய
வரலாற்றுப் புத்தகம்.
வாசித்தால் உயரும்
அறிவும் மிகுந்திடும்!

விலையைக் குறைத்தால்
விற்பனை மிகுமெ.
விடுதலையை தேடும்
பதிப்பக இடமே!

புத்தக உரிமை
படைப்பவர் வசமே.
புத்தக காதல்
புரிந்தால்நெசமே!

கவிஞர் முனைவர். ரவி சீனுவாசன்(எ) பகலவன்

மன்னித்து மன்னித்து
கண்ணீர் உறிஞ்சி
காதல் வெயிலில்
காயங்களெல்லாம்
காய்ந்துதிர்ந்து,
மென் நிழல் அணிந்து
மீண்டும் மீண்டும்
மொட்டுடைத்து
பூப்பூக்கவே
இந்த நேசம்
கண்மணி!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# உன்னைப் பார்க்கையிலே மோகம் கூடுதடி



செவத்த பருவம் முத்துப்பல் பேரழகி
ரோஜாப்பூ இதழழகி காந்த கண்ணழகி
கார்கூந்தல் தரைத்தொடும் கன்னியிவள்
உன்னைப் பார்க்கையிலே மோகம் வந்ததடி.

அன்னநடை உனது பாதத்தில் இருக்கிறதே
மயில் தொகையென மனசை விரித்தாய்
உன்பார்வையில் மயங்கி விழுந்தேனடி
காஞ்சிப்பட்டுச் சேலையில் அழகானவளே

ஊரார்கள் கண்ணுபடும் ஒன்மேனியிலே
உப்புக்கள் மிளகாய் சுத்திபோட்டுக்கடி
சங்குக் கழுத்துக்கு செயின் போடட்டுமா
விரலில்ஒருசவரம்மோதிரம்தரட்டுமா

கொஞ்சிப் பேசுகிறாய் எந்தன் தமிழச்சியே
விண்ணுலகத் தேவதையே நல்வரவாகுக
இடுப்புச் சேலைக்கொசுவத்தில் வச்சவளே
உன் பார்வையிலே கொள்ளைக் கொண்டவளே

கண்ணால செய்கைக்காட்டி ஈர்ப்பவளே
என் இதயத்தில் குடிகொண்டவள் நீயே
உன்மீது எனக்கும் காதல் வந்ததடி
உன்னைப் பார்க்கையிலே மோகம் கூடுதடி.

கவிஞர் இரா. சீ. பாலகுமார், சந்தோசபுரம் (சென்னை — 6)

# வலி சுமந்த மேகம்

இன்னும் எத்தனை நாட்களை
கடத்த முடியுமென்று தெரியாமலே
வரமாகச் சுமக்கிறேன்
உன் நினைவுகளை.



அடிக்கடி நலம் விசாரிக்கும் சாக்கில்
கொடுந்தேளாய்க் கொட்டுகிறது
உற்றாரின் உபச்சாரம்.

இருந்தும் கூட
என்றோ நீ எனக்கு அனுப்பி வைத்த
உலர்ந்த முத்தம் சுமந்த
கடிதம் மட்டுமே
எப்போதும் என் துணை.

வாடிக்கையாய் வந்து போகும் காற்றும்
வலியின்றி என்னைக் கொஞ்சுகிறது
தூரத்து மேகமோ
இப்போது தூறலுக்கு பதிலாக
என் நினைவை அஞ்சலாய்
நகலெடுத்துக் கொள்கிறது
எங்கேனும் உன்னைக் காணும்போது
ஈரமாய் அணைத்துக் கொள்ள.

கவிஞர் யாழிசை செல்வா

# சுவடுகள்

அலைகளில் மிதக்கும் நுரையில்
கரையாத நினைவுகள்
காலைத் தொட்டு கரையும்

கரையில் நின்றும்
கரைந்து நழுவும் கால்கள்

கண்களின் வழியே
காத்திருக்கும் கவிதையில்
கரைதொடாத அலைகள்

ஈரமணலில் பதியும் குழிகளில்
வற்றாத பாதச்சுவடுகள்

அலையின் பேச்சில்
கரையின் கரைதலில்
மணலின் வாசத்தில்

விழியில் ஓவியமாகி
வழியெங்கும் தடயங்கள்!



கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# அவன் பேரழகன்



விழியோடு வழிசமைத்து
வீடடைத்த கிளியே

செவ்விதழோடு குறிபார்த்து
அம்பெய்வதென்ன

என்ன தவம் செய்து இந்த
வரம் பெற்றாயோ

ஏழேழு ஜென்மம் போனாலும்
இவ் வனப்பு போவாதோ

கண்ணழகு காண காடு மேடு
எல்லாம் தேடி ஒரு கூட்டம்

கன்னத்தின் அழகு தானே
எண்ணமெல்லாம் கெட்டு ஒரு கூட்டம்

மூக்கழகு பார்க்க மூன்றரை
ஜன்மம் வேண்டும்.

உதட்டழகில் உலக அழகியெல்லாம்
எடுக்க வேண்டும் பிச்சை

எவ்வளவு சொன்னாலும்
எவ்வழகும் ஈடாகாது
செவ்வழகான கழுத்தழகு காண

உன் அழகில் பெண்கள்
மாயம் ஆகின்ற தருணம்
வரக்கூடுமே

உனை காக்க யாருக்கும்
முடியாதல்லவோ

உனை பொத்தி வைக்க
என் செய்வேனோ நானோ

கவிஞர் ஏ எம் முர்ஷிதா பேகம், கண்டி

# இருவரி கவிதை

ஒருவழிப்பாதையில்
இருமனப்பந்தம்
இணைந்து மணந்து
இனிமையில் கைசேர்ந்திடும்


உறவுகள் கூடிய அன்பிலே
உள்ளங்கள் உறவாடிடும்
இருவரி கவிதை எழுதும்
நெஞ்சத்தின் ஓசைகள்

நான் நீ என்பதை கடந்து
நாமாகி போகும்
நேசத்தின் பூபாளங்கள்
நித்தமும் தவழும்

அழகிய பந்தமிது ஆயுளுக்கும்
தொடருமிது
புரிதலில் புலர்ந்து புதுமெட்டில்
தொடங்கி

அகத்தோடு அகம் சேர்ந்து
அழியாத காதல் செய்து
இல்லறத்து வாசலில்
இனியதொரு பயணம்

வாழ்க்கையென்ற புத்தகத்தில்
புத்தம்புது அனுபவங்கள்
இன்பமும் துன்பமும்
இணைந்தோடி வந்திறங்கும்



இருவரி கவிதையில்
ஒளிவு மறைவின்றி பகிர்ந்து
வாழ்ந்திட
வானவில் வண்ணத்தில்
வாழ்க்கை நிறைந்திடும்

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# அமிர்த வேளை

அனைத்து உயிர்களுக்கும்,
அண்ட சராசரங்களுக்கும்,
விடியல் என்று உண்டே!


அது கர்ம பலன்களாக இருக்கலாம்.
பொருளாதார சிக்கலாகவும் இருக்கலாம்.
விடிவெள்ளி முளைக்கும் காலத்தே துயில் எழுந்தும்,
பல அறிய வேலைகளை
செய்ய முடியாமல் போனாலும்
தியானத்தில் அமரலாமே!



ஞாபக சக்தி தூண்டப்படுமே!
பல புரியாத கேள்விக்கு தீர்வு கிடைத்திடுமே!
ஞானத்தின் பாதையும் அறிந்திடலாமே!
மாணவர்கள் படிக்கும் பாடங்களும் எளிதில் புரிந்தும்,
மற்றவர்களுக்கும் தெளிவும் படுத்தலாமே!
ஞானிகளும், யோகிகளும், சித்தர்களும்
சீர் செயல் செய்தும் மனிதர்களுக்கு போதித்தும்
அருளை வழங்கினார்களே!
ஒளியும் ஒலியும் சேர்ந்து
சூரிய பகவான் ஓம் என்ற
நாதத்துடன் வெளி வருகிறாரே!
பிரம்மதேவன் உயிர்களை படைக்கும் வேளையே
பிரம்ம முகூர்த்தம் எனப்படும் அமிர்த வேளை!
நித்திரையை களைவோம், சிறப்புற்று வாழ்வோமே!

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# மனம் நிறைந்த நாட்கள்



தூளியிலே குழந்தையாய்
ஆடிடும் காலத்திலும்
தோலுக்கு நிகராக
வளர்ந்து நிற்கும் போதும்
அப்பாவின் கண்களுக்கு
நாம் என்றும் குழந்தைதான்.

நெருப்பாற்றில் நீந்தியே
நம் வாழ்வு உயர்த்திட
நாளெல்லாம் உழைத்தாலும்
நம் முகம் பார்த்தே
ஆனந்தம் கொள்வாரே.

ஆழ்கடல் அமைதியாய்
அப்பாவின் அன்புதான்
அளவிட முடியாத
பிரபஞ்சத்தின் பேராற்றலே
அற்புதத்தின் அதிசயமே.

தன் தேவைகளை சுருக்கியே
மகனின் புன்னகை காண
நாளெல்லாம் மெழுகாய்
தன்னையே இழக்கும்
அப்பா என்னும் ஆண்டவன்தான்
நாம் சுவாசிக்கும் மூச்சுதான்.

அப்பாவின் வேர்வைதான்
பன்னீராய் மனமனக்க
தோலிலே உச்சவராய் வீதியிலே
வலம் வந்த அந்த நாள் வாழ்வுதான்
பசுமரத்து ஆணியாய்
மனம் நிறைந்த நாட்களே.

பெற்றவர்களை தாண்டிய
பெருமைகளில்லை உலகிலே.
கண்ணிலே வைத்து நெஞ்சிலே போற்றி
காலமெல்லாம் வணங்கும்
அரிதான பொக்கிஷம்தான்
அப்பா என்னும் அதிசயம்தான்.

கவிஞர் ஜேப்பி @ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# தூரிகையில் வரைவேன்

தாரகை நான் தூரிகை கொண்டேன்
பாசமெனும் உறவுகளை
துளிதுளியாய் சேர்த்து
அன்பினால் வரைந்தேடுத்திட
பொறுமை படுத்தி நின்றேன்.

இன்னார் இன்னார் என்ற
அடையாள அறிமுகங்கள் தந்த
நிலபாட்டில் அன்பை விதைத்து
நம்பிக்கையோடு நாளைக்கடத்தி நின்றேன்.

வானத்து நட்சத்திரங்களைப்போல
கண்சிமிட்டி சிமிட்டி போன கோபத்தில்
துவளாது அன்பையே நாடி காத்து நின்றேன்.
வார்த்தை நீளாத நேரத்தை நீடித்து போன
ஏக்கத்தின் தாக்கத்தை தவிர்த்திட
போராடி நின்றேன்.



பொறுமைபோல திறமையாய்
விலகிநின்ற அன்பின்
நேசகர்கள் தந்த ஒப்பற்று
ஒளிவின்றி வீசிய தகர
பழிஅடையாளத்தையும் ஏந்தி நின்ற
மனம் துவன்றபோதும் வலிக்குமென்று
அவர்கள் மனதை எண்ணியே
நான் பொறுத்து நின்றேன்.

பொறுத்த என்னை மீறி வலித்தமனம்
பருத்து வெடிக்குமளவில்
வலியில் நனைந்து நின்றது.
குளிர்ந்த காற்றோடு குளிர்ந்த நீரில்
மூழ்கி ததும்பி நின்றதுபோல
உடல் விறைத்து விரைந்து செயற்பட
தெரியாதது போல நானுமாகி நின்றிருந்தேன்.

ஆகாய மேகமெல்லாம் திரண்டுவந்து
தண்ணீர் மல்க எனை மூழ்கடித்தது போல
கண்ணீர்மல்கி நின்றேன்.
வலியே வழி விடு குமிழிபோல வெடித்து போன
உறவை உதறி செழித்த பட்டமரமாய்
நானும் துளிர்த்துவிட தூரிகையாய் நானாகிறேன்.

சரிந்த சரிவுகளை தூரிகையால்தூவி
நீவி நிறமகற்றிடவே வேண்டும்.

கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

# தந்தை அதிகாரம்

நிலத்திற்கு
வலிக்குமோ என்று
பிஞ்சு பாதங்களை
அள்ளி கொண்டு
சுற்றி வரும்
தந்தைக்கு
இயற்கையும்
தாலாட்டு பாடுகிறதே.

தென்றலை வருட விட்டு,
இயற்கையின் அழகை
மிஞ்சி விடும்
தந்தை அதிகாரம்.



கவிஞர் கார்த்திகா, கோயம்புத்தூர்

# மகிழுந்து

கனவுகள் பற்பல காண்பவன் மனிதனென்றாலும்
குமரனிவனும் கனவுகள் கண்டவன்தான் என்றாலும்
குழந்தைப் பருவக்கனவாம் மருத்துவரா தலென்பது
கானல்நீரா னதுகுமரனிவனின் வாழ்வெனும் பாலைநிலத்தில்!

காலங்கள் உருண்டோடிய வேளையிலே மனையாளவள்
குடியிருக்க சொந்தவீடொன்று வேண்டுமென கட்டளையிட
கட்டிய வீடொன்று வாங்கிடலாம் குடியிருக்க,
கட்டிட வியலாது நம்மால் ஒருவீட்டையென
கணக்கிட்டு தேடியலைந்தேன் வீடொன்று வாங்கவப்போது
கண்கள் தேடின மகிழுந்து நிற்க
குடியிருப்பு வீட்டின்முன்தலை வாசலிருக்கும் வீடொன்றையே!



வாங்கினேன் வீடொன்று சுபாநகரில் தலைவாசலோடு;
வாங்கவியலவில்லை உடனடியாய் மகிழுந்தொன்று அதில்நிற்க;
ஆண்டுகள் ஓடின வேகமாய் ஐந்தெனவதன்பின்;
அடியேன் வீட்டுத்தலை வாசலில்மகிழுந் துவந்துநின்றது
மாருதி ஆல்டோ எண்ணூறு கம்பீரமாய்!
மனமது மகிழ்ந்தாலும் எந்தன் மாருதியினும்
பெரிதான மகிழுந்தைக் கண்டால் மதியிழந்து
பலவாறு மனத்துள் புலம்பி தவித்தேனே!

ஓய்வுபெற்றபின் கிடைத்திட்ட பணிகொடையில் எதுவாங்கலாமென
ஓய்வின்றிசிந்தித் தேன்நானொருபுற மும்மனையா ளொருபுறமும்!
தங்கம்வாங்கிட லாமென்று மனமது தவித்தாலும்
தங்கிடயில்லம் வேறொருநகரில் வேண்டுமதற்கு நிலத்தை
வாங்கிடுயென்றே அறிவுரைத்தாலும் மனமுமறிவும் ஒன்றிணைந்து
வாங்கிடு டாட்டாவின் நெக்ஸன் என்றுரைத்தனவே!

பாரதத்தை நேசித்து வாழ்ந்து மறைந்த
பாதகம் தாய்நாட்டிற்கு ஒருபோதும் செய்யாத
அமரர் சான்றோர் இரத்தன்டாட்டா நினைவாக
அடியேன்வீட்டில் ஏதேனுமொன்றிருக் கவேண்டுமென்ற பேராசையாலே
பலலட்சங்கள் கொடுத்துவாங்கியமகி ழுந்துநிற்கிறது எம்மில்லத்திலே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# விதி என்று எண்ணாதே!

ஏ மனிதா! எதையும் விதி என்று
எண்ணாதே நீ
விதி என்று எண்ணுபவனே
விதைக்கப்படுகிறான் மண்ணில்
விதையாய் அல்ல வெறும் சதையாய்

எதுவும் உன்னால் முடியும் என்பதை
ஏற்கதான் வேண்டும்
இரு விழி இழந்தவனையும்
வாழ வழி இழந்தவனாய் பார்ப்பதில்லை உலகம்
இருப்பினும் நீ

விளையாமல் இருப்பதுதான் தரிசு
விதை போட்டு மூடிவிட்டால்
அது உனக்கு தரும் பரிசு

உன் தோல்விகளை விதையாக்கு
உன் வெற்றிகளை அதற்கு சதையாக்கு
உன் வியர்வையே வெற்றிக்கு போர்வை

ஒரு சிற்றோடை மீன்
கடலை அடையாமல் இருக்கலாம்
நீச்சயம் ஆரை அடையும் ஆறுதலாய்

உன் உழைப்பே விதை
அதையே தினம் விதை



கவிஞர் வசந்தகுமார், சேலம்

# காதல்

உலகத்தின் உயிர்நாடியாய் இருப்பது காதல்!
உள்ளம் சார்ந்ததால் இலக்கியங்கள் ‘அகம்’
என்றுரைத்தனவே! மழைத்துளி மண்ணைத் தேடும்!
மனம் காதல் உணர்வுடன் போராடும்!
இனம் புரியா மாற்றங்களை ஏற்படுத்தும்!
கண்கள் பேசிடும் காதல் மொழியினை!
நினைவுகளை ஆக்கிரமித்து கற்பனையில் மிதக்கவிடும்!
காத்திருக்கும் நேரங்களில் காலம் நகர்வதில்லை!
சந்திக்கும் தருணங்களில் சட்டெனப் பறந்துவிடும்!
ஏக்கம் குடிகொள்ள தூக்கம் விடைபெறுமே!
தூக்கமில்லாக் கண்கள் கனவுலகில் மிதந்திடுமே!
உரைத்திட முயன்றால் வார்த்தைகள் வாராமல்
இதயத்தின் துடிப்போ இயல்பைவிட மிகுந்திருக்கும்!
இணைந்து நடக்கையிலே தொலைவே தெரியாமல்
மனமெங்கும் காதலின் சுவாசமே நிறைந்திருக்கும்!
புன்னகையைக் கண்டவுடன் புத்துணர்வு பாய்ந்து
உனக்காக எதையும் செய்திடுவேன் என்றுரைக்கும்!
காண்பதில் எல்லாமே காதலி(யி)ன் சாயல்கள்
நீக்கமற நிறைந்திருக்க ஏக்கத்தில் கவிபிறக்கும்!
இயற்கையின் பின்னணியில் காதலை இயம்பவைக்கும்!
வண்ணமயமாக வாழ்க்கையை உணர வைத்து
அனுபவிக்கத் துடிக்கும் ஆசையை அதிகரிக்கும்!
நிலத்தோடு காதலின் நிலைகளுக்குத் தொடர்புண்டு!
இலக்கியங்கள் காதலை எடுத்துரைக்கும் அழகாக!
காப்பியங்கள் காதலை கதைகளின் அங்கமாக்கும்!
கடவுளைக் காதலனாய்க் கருதி கசிந்துருகி
படைத்திட்ட பாடல்கள் பக்தி இலக்கியங்கள்!
காதல் காதல் காதல் காதல்போயிற்
சாதல் சாதலென சாற்றிடுவான் பாரதியும்!
புரிதலின்றி இணைந்தால் பிரிவில் முடியும்!
இனக்கவர்ச்சி காதல்ல! மனங்கள் ஒன்றிணைந்த
உண்மையான காதல் உலகினில் நிலைத்திருக்கும்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

### முள்

காதலை சொல்ல வாங்கிய
ரோஜா
என் கையை கிழித்தது
சற்றுயோசி என்ற
எச்சரிக்கையோடு.



### மலடி

கணவனிடம்தான் குறை என்று
தெரிந்தும் சமுதாயம் தரும்
இந்த பட்டத்தை மனதார
சில பெண்கள் சுமக்கிறார்கள்.

### உளி

கல்லுக்கு வலிக்கும்
என்று தெரிந்தும்
அதை கடினமான மனதோடு
செதுக்கிறது.

### கனவு

கலைந்துவிடும் என்று
அறிந்தும்
சிலர் உறக்கத்தை விரும்புகிறார்கள்.

### விஷம்

இதை அருந்தினால்
நிமிடத்தில் உயிர் பிரியும்
ஆனால்
சிலரின் வார்த்தைகள்
கொல்லாமல் கொல்லும்.

### பேனா

இந்த தீர்ப்பு ஒருவரின்
உயிரை
பறிக்கும் என்று அறிந்தும்
தன்கடமையைசெய்கிறது.

கவிஞர் கி. கரோ

செப்பனிட்டு
தன் நாற்காலியை
சரி செய்தாவது
அமர்கிறதே தவிர
ஒரு போதும்
நமக்கு
கற்றுக் கொடுப்பதை
நிறுத்துவதே இல்லை
வாழ்க்கை



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

# ஒருதலைக் காதல்



மறைந்து மறைந்து நின்று உனதழகைக் கண்டு
வியந்திடுவேன் உன்னிடத்திலே கூறாமலே!

ஒற்றை ரோஜாவை கரமதில் ஏந்தி அருகினில் வந்திட
தயக்கமும் என்னை பாடாய் படுத்திட

உன்னிடத்தில் கொடுக்காமலே சட்டென மறைக்கிறேன்
மலரையும் முதுகுக்குப் பின்னாலே!

இயல்பாய் நீ பேசி சிரித்திட நானும்
இயல்புடனே சிரித்திட முயன்று தோற்றுப் போகிறேனே!

உனது உடல்நிலை சரியில்லாது போக
நெஞ்சினில் வந்திட்ட துயரமதை
பெரும் வேடமிட்டே மறைத்திடுவேன் உன் முன்னாலே!

உனது விழிகளில் வழிந்திடும் நீர்தனைத் துடைத்திட
கை விரலும் கெஞ்சிட
உன்னை ஆறுதலாகத் தேற்றிடத்தான் மனமது துடிக்கையிலும்
ஏதுமறியாதவனாய் கடந்து செல்கிறேன் உன்னையே!

வரன் பார்த்து விட்டார்கள் என்று என்னிடத்தில் நீ உரைக்க
மனதினில் விழுந்த பேரிடியைத் தாங்கி
வெளியே சிரிக்கிறேன் கையாலாகாதவனாய்!

மணமேடையில் நீ இருக்க
மணமகனாய் வேறொருவர் அமர்ந்திருக்க
மங்கள நாண் உனது கழுத்திலே ஏறிட
எனது இயலாமையை நினைத்து மனதினுள்ளே புழுங்குகிறேனே!

விடைபெறும் நேரமதில் கண் கலங்கி நீ நிற்க
விடை கொடுக்க இயலாது துயரத்திலே நான் நிற்க
எங்கிருந்தாலும் வாழ்க என வாழ்த்தி அனுப்புகையில்
புரிந்ததிங்கே இது ஒருதலைக் காதல் என்று!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# காதல் பிதற்று

கண்ணியர் கண்(மை)யில் கலங்காத என் உயிர்
நித்தம் நிசந்தம் இன்றைய வசந்தம் நாளைய பந்தம்
நான் அறியா ஆவணம் அன்றே அவர் தரும் புது சாதனம்
களவு கற்பு பாவனம் அன்றே சிதறும் இலக்கிய ஆவணம்.

என் உயிர் அவள் காவிய தோரணம் நாளைய சரித்திர அவ்வியம்
தீண்டாத திடல் ஓவியம் என் கற்பனைக் காவிய களஞ்சியம்
அவள் யார்? அவள் எங்கே ?அவள் என்! என்னவென்று? நான்
இன்று வரை அறியா சாதனம்.

என் கலையாத காவியம் என் கற்பனைத் திடல்
என் *கண்மணி* ஓவியம்.
அவள் எங்கே ? நிசப்தம்
என் கற்பனையில் தினம் இங்கே?
என் தினத்தொடர்க் கதை.



கவிஞர் ம. செல்லமுத்து, நூத்தப்பூர்

அம்மனத்தை காட்டிலும்
அரைகுறையிலேயே
ஆபாசமதிகம்.

அருவருப்பான
வார்த்தையெல்லாம்
அழகு பெறுகிறது காமத்தில்.




கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# புத்தகம்

புரிதல் நிறைந்த புனித புத்தகங்கள்
அரிய நூல்களின் அற்புத தொகுப்புகள் ஆகுமே
காலத்தால் அழியாத காவியம் படைக்கும்
பாலத்தின் கண்ணிய பாலமாய் திகழுமே

உலகத்தின் உண்மைகள் அனைத்தையும் உளமாற
பலமாய் அளிக்கும் பகுத்தறிவின் நூல்களே
அறிஞர்கள் கூறிய அனைத்தும் அறிவாக
நெறியாய் தந்ததே நேர்மையின் வளமாகவே



தொகுப்புக் களஞ்சியமாய் தொகுத்த வரமாய்
வகுக்கும் வாழ்க்கையின் வளமையின் குணமாய்
சிரமம் போக்கிடும் சிரசின் மருந்தாய்
வரமாய் கிடைத்த வான்புகழ் அறமே

படிக்கத் தூண்டும் பண்பின் நலனாய்
துடிக்கும் உதட்டின் துவக்க வடிவமே
எண்ணிலடங்கா எழுத்துகள் எழுச்சி வார்ப்பாய்
துணிந்த நல்லுறவாய் துவக்கம் தந்திடுமே

நாமுமே மறைந்தாலும் நாளுமே அழியாத
சமுதாய சிந்தையை விதைத்திடும் வடிவமே
சாதனைகள் படைத்திட சாத்திரம் நிறைவாக
சோதனை தாண்டி சோகத்தை களையுமே

மொழிகளின் முதன்மையை நாட்டிற்கு விளக்கிடும்
எழிலான வளர்ச்சியின் எழில்மிகு நாளிதழே
கவிதை கட்டுரை கதைகள் வடிவாய்
குவிந்த செயலின் குழந்தையே தொடர்வாய்

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# பசி



பசி இரண்டு எழுத்து
மிரட்டி நிற்கும் உயிர்களை!
உலகை ஆட்டிப் படைத்திடும்
ஒரு வார்த்தை பசி!

பாவத்தை மனிதன் சுமக்க
பாரில் வந்து சேர்ந்த ஒன்று!
"பசி" வந்தால் பத்தும் பறந்துவிடும்!

எதிலும் பசி எங்கேயும் பசி
நேரமும் இல்லை காலமும் இல்லை
உயிரை குடித்து நிற்கும் பசி!

மனித மாண்புகள் மிதிபட
புரட்சிக்கு வழி கோலும் பசி!
இறைவன் உண்டென அறிய
உண்மைக்கு சாட்சியம் சொல்லும் பசி!

பசியினால் அழிந்தவர் கண்டு
குஷியினால் வீழ்ந்தவர்
உள்ளத்து ஆசைகளில் தொலைந்தனர்!
உலகினிலே மனிதர்தாம் கண்டோம்!

ஆசைகளுக்கு உரம் போடும் பசி
ஆட்டிவைத்திடும் பாவச் சேற்றிலே பசி
உள்ளத்தைக் கட்டி ஆசைகளுக்கு வரம்பு கட்டிட
உடனே அடங்கிடுமே கொல்லும் பசி!

பசி இரண்டெழுத்தே
இரண்டு வகையே பசி
உளப் பசி; உடல் பசி
இறுதியில் பசி போய் சேர்வது
மதி தொலைத்த விதியிலே!

பசி கண்டோம் பசி உணர்ந்தோம்
பசி உயிரில் கலந்த ஒன்று
பசியே யாவற்றுக்கும் அடி என புரிந்தோம்
தர்மங்களில் சிறப்பு
பசி போக்குவதே எனக் கண்டேன் வாழ்வில்!

கவிஞர் திருமதி. ஜுவனிற்றா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

## அவரவர் பார்வையில்

நமக்கான
மகிழ்ச்சிக்கான விஷயம்
பிறருக்கு 'இதுக்குபோயா?
நமது வேதனைக்கான காரணம் - பிறரால்
'யாருக்குத்தான் இல்லை'

நாம் உணருகின்ற
நம்பிக்கை நிகழ்வுகள் - பிறரால்
இது என்ன பெரிய விஷயம்?

நாம் சொல்கின்ற
பரிதாப நிகழ்வுகள்
பிறரால் எங்குதான் இல்லை?

****



## வகை வகையாய்

இது வேண்டும் என்ற முயற்சியில் வெற்றிதா
அது நடக்கக்கூடாது என்ற
எண்ணப்படி நடத்தி காட்டு

இடைஞ்சல்கள் வந்தாலும்
சமாளிக்க வழிகள் காட்டு தோல்வி வந்தாலும்
மீண்டுவர முயற்சிக்க நம்பிக்கை கொடு
இழப்பு ஏற்பட்டாலும்
அதைவிட பெரிதாய் கொடு

கஷ்டங்களும் ஏளனங்களும்
வசைமொழிகளும்
பரிசானாலும் தாங்கிக்கொள்ளும்
ஆற்றலைக்கொடு

அங்கீகாரமும் பாராட்டும் கிடைக்கையில்
அலட்டல் இல்லாத
மனதையும் புத்தியையும் கொடு

எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாய்
என்ன செய்வது என்றே தெரியவில்லை
நல்வழிகாட்டு என வகைவகையாய்
இறைவனிடத்து மனம்உருகி
பிரார்த்தனை

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

பதினான்கு நாட்களுக்குப் பிறகு, நெய்லி மருத்துவமனைக்கு வந்து எல்லாம் முறைப்படி பணப் பட்டுவாடா செய்து விட்டு நரேனின் அறைக்கு வந்து "நேற்று முடிந்தால் போவதாகச் சொன்னாயே போக முடிந்ததா?" என்று கேட்டாள். உதட்டை பிதுக்கிய நரேன் "ப்ச்....போக முடியல...இப்ப கூட உன் காரிலே ஏறுவதற்கு இண்டு பேர் துணை தேவைப்படுது....ஆஸ்பத்திரிலே ரெண்டு பேரை அரேஞ்ச் பண்ணி வச்சிருக்கேன்" எழுந்து நொண்டியபடியே வந்து நாற்காலியில் அமர்ந்தான்.

தொடர்ந்து " வசந்த் அப்பா அம்மா கேட்டாங்கண்ணா என்ன சமாதானம் சொல்லப்போகிறோனோ அதுதான் பயமாயிருக்கு" என்றான்.
"அதன் பிறகு வசந்த், கவிதா போனே வரவேயில்லையா? .என்றாள் நெய்லி.
"இல்லியே... அது தான் பயமாக இருக்கிறது...."
"சரி..சரி... கிளம்பு... என்கூட வந்தவர்கள் காரில் காத்திருக்கிறார்கள்" என்று சொல்ல, இருவர் வந்து மெதுவாக, நரேனைத் தாங்கிப்பிடித்துக் கொண்டு காருக்கு வந்தார்கள்.
*************************************************************

"என்ன திட்டம் வைத்திருக்கிறாய் சொல்லு?"என்றார் அமைச்சர்
அமைச்சரே கேட்கும் போது அமைதி காப்பது தவறென உணர்ந்த பிரபு " கண்ணன் நல்ல செய்தியோடு வருவான் சார்" என்றார்

"கிழிச்சீங்க...இப்ப கண்ணனே நம்ம முத்து சொல்ற மாதிரி ஆடிக்கிட்டு இருக்கான். சே...இன்னும் இந்த ஆளை நம்பிக்கிட்டிருக்கேன் பாரு... முத்து சொல்லுப்பா"? என்றார்

"ஐயா அவங்க. போற காரிலே சிப் வைத்தாகி விட்டது. அவங்க எங்க போனாலும் நாம நம்ம காரிலே இருந்தபடியே ஈஸியா அங்கள பின் தொடர்ந்திலாம்" என்றான் முத்து. "சபாஷ் முத்து. சரி அவங்க எப்ப கிளம்புறாங்கண்ணு பாரு. நாம பின்னால போயிடலாம்.

ஆங்..பிரபு....காட்டுக்குள்ளே போறதுக்கு அனுமதி வாங்கிடுவீங்கல்ல. ...இல்ல ..அதுக்கும் மந்திரி பவரைத்தான் உபயோகிக்கணுமா"?கோபமாக சாடினார் அமைச்சர்

"அதெல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன் சார்"என்றார் பிரபு
"ஆங்... முத்து அவங்க கார் கெளம்பிட்டாண்ணு பாரு...
" ஆமா. சார். அவங்க கெளம்பியாச்சி" என்றான் முத்து
" நாமும் புறப்பட வேண்டியது தானே?" என்று முன்னால் அமைச்சர் நடக்க, எல்லோரும் அவரை பின் தொடர்ந்தனர்.
நரேனும் நெய்லியும் இங்கிலாந்து குழுவினரும் அந்த செடியை நெருங்கிய போது, "ஏய் யாரோ நம்மள பாலோ பண்ற மாதிரி தெரியுது" என்றாள் நெய்லி.

"சான்ஸே இல்ல.. இந்த இடம் யாருக்கும் தெரிய வாய்ப்பில்ல. பாரு அந்த ஆல காலச் செடி அங்கே தெரியுது பாரு" என்றான் நரேன்.
"ஏய்... இங்கே பாரு. வசந்த்... கவிதா... இது யாரு?" என்றாள் நெய்லி பயத்தில் கிறீச்சிட்ட படி.

"அது நம்ம ஆட்டோ டிரைவர் ரமணி..இது என்ன மூணு பேரும் சிலை மாதிரி நின்னுகிட்டு..." என்று சொல்லியவாறு முதலில் நரேன் இறங்க, நெய்லியும் பின் தொடர்ந்தாள். கூட வந்தவர்கள்
" நீங்க போய் அந்த செடியக்கொண்டு வாங்க" என்றவாறு திரும்ப பாம்பு கூட்டம் பின்னால் நெளிந்து வர, அவர்களும் நரேன், நெய்லியோடு இறங்கி ஓட, அவர்கள் செடியை நெருங்க, எல்லோரும் கற்சிலையாகி விட, யாரோ அலை பேசியில் அழைத்ததில் நெய்லியின் அலைபேசி மணி அடித்துக்கொண்டே இருந்தது.

பின்னால் வந்த மந்திரியின் காரில் இருந்த பிரபு," அதோ அந்த சித்தரின் கல்லறை மேலே அந்தச் செடி" என்றார்.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

கூட இருந்த கண்ணான், "என்ன எல்லாரும் அங்கே சிலை மாதிரி நின்று கொண்டிருக்கிறார்கள்"? என்று கேட்க, " எவன் எப்படி போனா நமக்கென்னடா?" என்ற அமைச்சர், " கமான். முத்து. இறங்கு. கண்ணன் இறங்கி வந்து முன்னாலே போ..." என்றார்.

அந்த ஆலகாலச் செடியை நோக்கி முத்து, கண்ணன், அமைச்சர் மூவரும் நடக்க, ஏதோ தப்பு நடக்கிறது என பிரபு பின்னாலே ஓட ஆரம்பிக்க... அவரை பாம்புக்கூட்டம் துரத்த ஆரம்பித்தது. செடியை நோக்கி நடந்த முத்து, கண்ணன், அமைச்சர் மூவரும் அருகில் வர, முதலில் கண்ணன் "ஆ" வென்று கத்தியவாறு கற்சிலையாகிப் போக... அவனோடு முத்துவும் அமைச்சரும் கற்சிலையாகிப் போனார்கள்.
***************************************************************************

"உச்சிக்கு கீழடியோ ஊசிமுனை வாசலுக்குள் மச்சிக்கு மேலேறி வானுதிரம் தானெடுத்து கச்சை வடம் புரிய காயலூர் பாதையிலே வச்சு மறந்தல்லோ- என் கண்ணம்மா வகை மோசமானேன்டி.'*
************************************************************************

பேரின்பத்தை உணர்ந்தவர்கள் சிற்றின்பத்தை நாடமாட்டார்கள். இப்படி இறை இன்பத்தை
உணர்ந்தவர்களுக்கு கரும்பும் துவர்க்குமாம்; செந்தேனும் புளிக்குமாம். ஆக்ஞையில் (இரு புருவங்களுக்கு நடுவில் தியானம் செய்து) பிரம்ம எந்திரத்தை தரிசித்து நினைத்தால் அமிர்தத் தேனைப் பருகமுடியும்.
பேரின்பம் பெறமுடியும் என்பது கருத்து.
**********************************************************************

நரேன் வந்திருந்த காரில் கிடந்த சித்தர் எழுதியிருந்த புத்தகத்தில் 'இந்தப் பாடலை பாராயணம் செய்தும் தொடர்ந்து சொல்லிக் கொண்டும் போகிறவர்களுக்கு இந்த ஆலகால கற்பக செடி எளிதில் கிடைக்கும். இந்த மந்திரத்தை சொல்லாமல் செடியின் அருகில் அரைகல் தொலைவு நெருங்குபவர்கள் கற்சிலையாவார்கள் என்று எழுதியிருந்தது.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

உயிரின் அசைவினில் உலகினைக் காண வைத்து உருப்பெறச் செய்த தியாகச் செம்மல்களாகிய பெற்றோர்களுக்கு பேரன்பின் வழியே செலுத்தும் நன்றி மடல் இது. வளங்களும் வசதிகளும் வாழ்வை நிறைத்திடும் வசந்தங்களில் இளைப்பாற்றிட வைத்திடும் மேட்டுக்குடியில் பிறந்திட வாய்ப்பில்லையென்றாலும் நினைத்தவுடன் எல்லாம் கிடைத்திடும் என்ற நகரத்தின் வாசலில் நிற்காமலும் வானம் பார்த்தே வாழ்வை நகர்த்தும், வாகனங்கள் எட்டிப்பார்க்காத ஒற்றையடிப்பாதைகள் நீளும் கிராமத்தின் தலைமடியில் பிறந்தவனுக்கு வறுமையின் சுவடுகள் காட்டாமல் வளர்த்திட நீங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளை எப்போதும் அறிந்து கொண்டவனல்ல நான். ஆனாலும் நிம்மதியின் மெத்தைக்குள் வாழ்ந்திட வழியமைத்து எப்போதும் திரைமறைவில் நின்றுகொண்டு தம்மைக் காட்டாமல் அமைதியாகி நிற்கும் உங்களையே எனக்கான முன்மாதிரியாக எடுத்துக் காட்டவே இந்த மடல்.

"அரிது அரிது மானிடராய்ப் பிறப்பது அரிது அதனிலும் அரிது கூன்குருடு செவிடு நீங்கிச் பிறத்தல் அரிது அதனிலும் அரிது இளமையில் வறுமை நீங்கி வாழ்தல் அரிது" என்ற அவ்வைப்பாட்டியின் அமுதவாக்கு எனக்கான உலகத்தில் என்னை வெளிக்காட்ட உதவும் விளம்பரமாகவே ஒளிர்கிறது.
குழந்தைப் பருவத்திலிருந்து விளையாட்டுகளும் கும்மாளமுமாய் உடலின் எல்லா இடங்களிலும் காயங்களோடு வளர்ந்து இளமைப் பருவத்தை எட்டி எனக்கென்ற இல்லற வாழ்வில் நுழைகையிலும் வறுமையின் தீநாவுகள் எப்போதும் என்னைத் தீண்டாமல் காத்துக்கொண்ட உங்களின் வழிகாட்டலையே இன்றும் எனக்கான வாழ்வியலின் நகர்வுகளுக்கு அமைத்துக் கொள்கிறேன்.

அடிப்படைத் தேவைகள் எவை என்பதையும் ஆடம்பரத் தேவைகள் எவை என்பதையும் உங்களின் வாழ்வியலோடு சுட்டிக்காட்டியிருப்பீர்களே தவிர ஒருபோதும் அறிவுரையாகவோ கட்டளையாகவோ வெளிப்படுத்தியதில்லை. பொருட்களின் பின்னே அலையும் மனதை வளர்த்துக் கொண்டால் பொறுமையும் இயல்பும் காணாமல் போய்


கவிஞர் இளையவன் சிவா

நிம்மதியின் வாசல் எப்போதும் மூடிக்கொள்ளும் என்றே நித்தமும் சொல்லிவைப்பீர். இப்படியான கட்டமைப்பை உற்றுநோக்கியே வளர்ந்து வருகையில் எதைத் தேவையெனக் கொள்வது என்பதையும் எதை ஆடம்பரமெனத் தள்ளுவது என்பதையும் குணமாகவும் பழக்கமாகவும் மாற்றிக்கொள்ள முடிந்தது.

வானில் பறந்தாலும் பறவையின் கவனம் கிளையின் மேலே ஊஞ்சலாடும் கூட்டின் ஆட்டத்தின் போக்கைத் தாண்டிய உயிர்ப்பை நோக்கியே கூர்மையாகிறது. தன்னால் உருவாகி உலகினைக் காணும் வாரிசுகளின் வளர்தலில் அவர்கள் நிலை நிற்கும் அடிப்படையை அமைத்துக் கொடுக்கும்வரை தங்களது சுகதுக்கங்களை வெளிக்காட்டாமல் வாழும் நீங்களும் பறவைகளின் மனதோடுதான் நிற்கிறீர்கள். அதைப்போலவே வாழும் நாளெல்லாம் நொடிக்கொருதரம் எனக்கான பாதையின் மீதே உங்களின் பார்வை நிலை நின்று விடுகிறது. பூமியின் சுவாசம் மரத்தை வளர்த்தலைப் போல எனக்கான உமது பார்வையும் நாசிக்கருகில் நிற்கிறது. பொறுமையும் வேண்டும்போது வேண்டியதை வழங்கிடும் கருணையும் தனக்குள்ளே புதைந்திருக்கும் வளங்களை வழங்கும் பொதுமைத்தன்மையும் கொண்ட பூமியைப் போலவே எப்போதும் நான் தேவைகளுக்காக உங்களை நாடும்போது கொடுத்திடும் உங்களின் குணத்தை வியந்துகொண்டேயிருப்பேன்.

வாழ்க்கைப் பயணத்தில் கல்வியின் வழியிலோ காசினை இழந்துவிட்ட வழியிலோ உறவுகளும் நட்புகளும் முதுகில் குத்திய துரோகத்திலோ அகப்பட்டு வேதனைக்குள் சுழன்றாடி விழுந்த போதும் சோதனைகளுக்கு இலக்காகி உருட்டிப் போட்ட அத்தனை இன்னல்களுக்குள் நான் தொலைந்த போதும் வாழ்வின் படிநிலைகள் இப்படித்தான் எல்லோருடனும் விளையாடி விளையாடி அவர்களை வீழ்த்த ஆசைப்படுமென்றும் அவற்றிலிருந்து எழுந்து வந்து அவைகளின் தடைகளைத் தாண்டி எழுந்து நின்று சிகரங்களை எட்டுபவர்களே உலகத்தின் பக்கத்தில் தனக்கான ஓர் இடத்தை உறுதிசெய்ய முடியுமென நீங்கள் சொல்லும் ஒவ்வொரு சொல்லுக்குள்ளும்

கவிஞர் இளையவன் சிவா

நான் அறிந்து கொண்டது எனக்கான படிக்கற்களே. அப்படியான எவ்வளவோ உயரங்களில் நான் நின்றாலும் ஏற்றிவிட்டுவிட்டு ஏணியாகவோ நகராத பள்ளங்களின் பாதச்சுவடுகளைப் போலவோ உங்களது ஊக்குவிப்புகள் பின் நின்று ஓயாது என்னை இயக்கப்படுத்துகின்றன.

முயற்சிகளில் தோல்வியைத் தழுவித் தழுவி கவலைக்கண்ணீர் விழுங்கி காலத்தை எனக்குள் உருவேற்றி உருவேற்றி மின்னும் உயரங்களைத் தொடும் ஒவ்வொரு நொடியும் ஓயாது தன்னையே உருக்கி உள்ளே ஒளிந்து கொண்டிருக்கும் உமது கண்ணீர் நினைவில் எழும்.
சிறுவயது முதலே நான் அறியாமல் இருந்துவந்த எனது பட்டினியை எப்போதும் என்னிடமிருந்து பறித்துக்கொண்டு அவ்வப்போது தனக்கானதாக மாற்றிக்கொண்டு தங்களின் வயிறுகள் காலியான போதும் மனதளவினில் மகிழ்வோடு சேர்த்து வாழ்த்துக்களால் உயிரை நிரப்பிக்கொண்டு நடமாடியே அன்றாடத்தை நகர்த்திக்கொண்ட அன்பையும் பார்த்துக்கொண்டே கடக்கிறேன் எனது வயிறை நிரப்பியபடி. இயலாமையின் எல்லையிலும் எனக்கான வேண்டியவை கிடைக்காத பொருளாதாரத்தின் நெருக்குதலுக்குள் மாட்டிக்கொண்டு வார்த்தைகளால் நோகடித்த போதும் மௌன அன்பால் மனதைப் பிழியும் ரகசியம் காப்பீர். குருதி தெறிக்கும் இளமையின் ஊஞ்சலாட்டத்தில் கோபங்களில் நான் குதிக்கையில் புன்னகை கவசத்தாலும் மௌனத்தின் அவசியத்தாலும் என்னை குளிர்விப்பீர்.. எது உனது சுதந்திரம் என்பதற்கான இலக்கணத்தையும் மதிப்பும் மரியாதையும் எப்பொதும் உன்னிடமிருந்து பிறருக்கு முதலிலேயே வழங்கப்பட வேண்டும் என்பதையும் அதற்கான வாய்ப்புகளை ஒருபோதும் துறந்து விடாமல் பிடித்துக் கொள்ளவேண்டும் என்பதையும் எனக்குள் தந்திருக்கிறோமா என்ற அடிப்படையெல்லாம் அறியாமல் அதற்கான பொழுதுகளை உருவாக்கித்தந்து நான் அதிலிருந்து நழுவும்போதெல்லாம் நினைவூட்டி உயிரையும் உணர்வையும் மீட்டெடுக்கவும் துணிவீர்கள். ஓயாத உழைப்பின் காரணமாகவும் தொடர்ச்சியான வேலையின் காரணமாகவும் தள்ளாத நிலை என்றாலும் சோர்வைத் தள்ளி வைத்து உயிரைக் கரைத்து உணவு சமைத்துக்கொடுக்கும் தாயாக உழைப்பைக் கொட்டி பணத்தை நீட்டும்

**கவிஞர் இளையவன் சிவா**

தந்தையாக நீங்கள் எடுக்கும் அவதாரங்களில் மறைந்திருக்கும் வேதனைகளை ஒருபோதும் நானறியத் தருவதேயில்லை. .

திருவிழாக்களின் வருகை நிகழும் போதெல்லாம் புத்தாடைகளில் என்னை மகிழ்விக்கும் உங்களின் அன்பினில் மயங்கி விடும் மனதிற்கு நீங்கள் அணிந்திருக்கும் பழைய உடைகள் கூட தெரியாமலேயே வளர்ந்து விட்டவன் நான்.
எப்போது உமக்கான உணவை எடுப்பீர் என்பதைக்கூட நான் அறிந்துகொள்ள முடியுமா இல்லையா எனும் உணர்வில் இல்லாமல் உணவை நான் கூட்டிக் கொண்டிருக்கையிலும் ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தாயென, தந்தை மகற்காற்றும் நன்றியென நான் உண்பதை ரசிப்பீர்.

உலகம் சொர்க்கத்தையே எனது காலடியில் போட்டு உங்களைக் கேட்டால் நான் சொர்க்கத்தையே விட்டுத்தரும் மேன்மையை உங்களிடமிருந்தே கற்றுக்கொண்டேன். வயதுக்கான தவறுகளையும் அறியாமையில் அடிக்கடி ஏற்படுத்திக் கொள்ளும் தவறுகளிலும் இடர்பாடுகள் ஏற்படுகையில் கண்டிப்பில் கவனத்தைக் கூட்டி தண்டிப்பதில் நின்றுவிடாமல் நீங்கள் காட்டிய விவேகத்தை இன்றுவரை என்னால் கடைபிடிக்க முடியவில்லை என்ற ஏக்கத்தில் தவிப்பவன் நான். உனது வேலையின் வழியே நீ ஈட்டும் அத்தனையும் உனக்கானது என்றும் நீ வாங்கும் கடனோ உன்னை உறங்கவிடாது அடுத்தவனுக்கான உழைப்பாளி யாக உன்னை அடிமையாக்கிவிடும் என்றும் நீங்கள் சொன்ன பாலபாடத்தை கொஞ்சமாகவாவது கடைபிடித்துக்கொள்கிறேன். எனக்கான நிறைவுகளில் மொத்த எல்லைகளும் இடைநின்றால் எல்லாம் திறந்து உம்மைச் சரணடைவேன். உயிரின் துளிகளில் ஒவ்வொன்றாய் கரைந்து போனாலும் உங்கள் பேரைச் சொல்லிச் சொல்லி ஒன்றுசேர்க்கப் பாடுபடும் உணர்வில் என்னை நிலைநிறுத்தி வைப்பேன். எனக்கான உயரங்களை அடையும் ஒவ்வொரு முறையும் அதற்கான தூண்டுகோலும் வழிகாட்டலும் உங்களிடமிருந்து வருகையில் அதையே பின்பற்றியபடி எனக்கான

கவிஞர் இளையவன் சிவா

வாய்ப்புகளைக் தேடத்தொடங்குவேன். மேடைகளில் நீள அகலங்களில் என்னை நான் உற்றுப் பார்க்கும் தருணங்கள் பற்பல வாய்க்கின்ற வேளைகளில் இவன் தந்தை என்நோற்றான் எனும் சொல்லாகவோ என்ற பொழுதில் பெரிதுவக்கும் தாயாகவோ உங்களை பிறரின் எண்ணத்திற்குள் புகுத்தி விடும் அதிசயத்தையே ஏற்படுத்த முயல்கிறேன். எனது பற்பல தேடல்களில் உங்களைத் தொலைக்கச் சொல்கிறார்கள் வழிகாட்டியைத் தொலைத்த பின் பாதையே காணாமல் போய்விடுகையில் என்னுடைய உலகமே இழந்துபோகும்போது தேடல் எதற்கு என்ற எண்ணத்தில் நுழைந்துவிடுகிறது மனம். முயற்சிக்க நினைக்கும்

எனக்கான கனவுகளில் நான் இமயம் தொடாமலிருந்தபோதும் அது எனக்கான இழப்பில்லை என்பேன். கற்றுக் கொள்வதில் இருந்து ஒருபோதும் பின்வாங்குவதை தவிர்க்க வைத்த உங்களது உறுதியான மனப்பாங்கின் துணைகொண்டே எனக்கான வாழ்க்கையை நான் வாழ்ந்துவிட்டு சிறப்பிப்பதில் உள்ள மனநிறைவே உங்களின் வாழ்வோடு ஒட்டிய மகிழ்வினை வழங்கிவிடும் என்ற மனநிறைவில் இருப்பேன். உங்களது தாய்மை உள்ளத்திற்கு அதுவே மிகச் சிறந்த பரிசு என்பேன். உடலாலும் உணர்வாலும் இருப்போ இல்லையோ என்பதைத் தாண்டி நினைவுகளுக்குள் நீங்கள் எப்போதும் நின்று கொண்டிருப்பீர்கள் என்பதையே உங்களுக்கான பரிசாக அளித்து மகிழ்கிறேன்.

என்றும் உங்களின் அன்பு மகன்.




கவிஞர் இளையவன் சிவா

# 'விவசாய கவிஞர்' மருதகாசி

கட்டுரை

## கவிஞன் பிறந்தார்


அய்யம்பெருமாள் – மிளகாயி

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அருகில் மேலக்குடிக்காடு கிராமம் மருதகாசியின் ஊர். அய்யம்பெருமாள் உடையார், மிளகாயிஅம்மாள் தம்பதியருக்கு 1920 பிப்ரவரி 13 மகனாகப் பிறந்தார். உள்ளூரில் தொடக்கக் கல்வி பயின்றார். பின்னர் கும்பகோணம் அரசுக் கல்லூரியில் பயின்றார். அருணாச்சல கவிராயரின் படைப்புகளின் தாக்கத்தால் சிறுவயதிலேயே கவிதை எழுதும் ஆற்றல் பெற்றார்.

## கவிதை பிறந்தது



மருதகாசி தந்தை பண்ணையாராகவும், மணியக்காரராகவும் இருந்தார். ஊருக்குள் நாடகம் நடத்தவரும் குழுக்கள் தங்குவதற்கும், சாப்பிடுவதற்கும் மருதகாசியின் தந்தைதான் ஏற்பாடு செய்வார். பாலையா,எம்.ஆர்.ராதா இவர்களெல்லாம் வரும்பொழுது, அவர்களுடன் நல்ல பழக்கம் ஏற்பட்டு, தேவிநாடகசபா நாடகங்களுக்குப் பாடல்கள் எழுதி வந்தார். கவிஞர்.கா.மு.ஷெரீபின் நாடகக்குழுவுடன் இணைந்து பணியாற்றினார். அங்கு இசையமைத்து வந்த திருச்சிலோகநாதனின் மெட்டுகளுக்குப் பாட்டு எழுதி வந்தார். பாடலாசிரியர் ராஜகோபால ஐயரிடம் உதவியாளராகவும் பணியாற்றினார்.

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

# 'விவசாய கவிஞர்' மருதகாசி

கட்டுரை

### குடும்பம்



1940ஆம் ஆண்டு தனக்கோடி அம்மாள் என்பவரை திருமணம் செய்து கொண்ட கவிஞருக்கு, ஆறு மகன்கள், மூன்று மகள்கள் என மொத்தம் 9 இளைய கவிகள் பிறந்தார்கள்.

### மாயாவதியில் வந்த பாடல் வாய்ப்பு

1949-ல் திருச்சிலோகநாதன் மூலமாக மாடர்ன் தியேட்டர்ஸின் 'மாயாவதி' படத்துக்காக 'பெண் எனும் மாயப் பேயாம்' என்ற பாடலுடன் தன் திரையிசைப் பயணத்தை தொடங்கினார்.




தொடர்ந்து டி.ஆர்.சுந்தரம் தயாரித்த பொன்முடி, மந்திரிகுமாரி, அலிபாபாவும் 40 திருடர்களும், மகேஸ்வரி, குமுதம், வண்ணக்கிளி, பாசவலை, கைதிகண்ணாயிரம் போன்ற பல வெற்றிப் படங்களுக்குப் பாடல்கள் எழுதிப் புகழ் பெற்றார்.

1949 முதல் 1983ஆம் ஆண்டு வரையிலான 35 ஆண்டுகளில் சுமார் 250 படங்களுக்கு 2000 பாடல்கள் வரை எழுதி திரைத்துறையில் புகழின் உச்சிக்கு சென்றார் கவிஞர் மருதகாசி.

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

கட்டுரை

சக கலைஞர்களை மதித்துப் போற்றியவர்.



**பட்டுக்கோட்டையாரோடு :**

சென்னை தியேட்டர்ஸ் நிறுவனத்தில் பாட்டெழுதி கொடிக்கட்டி பரந்த காலத்தில் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ்லிருந்து மருதகாசி ஐயாவிற்கு போன் செய்து பாட்டெழுத கேட்ட போது, "நான் இப்போது நிறைய படங்களுக்கு எழுத வேண்டிய கட்டாயம் இருக்கிறது. எனவே, என்னால் வர முடியாது. ஆனால் என்னைவிடவும் நுட்பமாக சிறப்பாக எழுதக் கூடிய பாரதிதாசன் மாணவன் ஒருவர் இருக்கிறார். அவர் பெயர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவரை அனுப்பிவைக்கிறேன்" என்று' பாசவலை' படத்திற்கு பாடல் எழுத வைத்தவர் கவிஞர் மருதகாசி.

**உடுமலை நாராயண கவியோடு:**



"என்னுடைய 2 ஆயிரம் பாடல்கள், கவிராயரின் 2பாடல்களுக்கு ஈடாகாது'' என்று மனந்திறந்து பாராட்டுவார். அத்தகைய உடுமலைநாராயணகவி, மருதகாசி மீது அளவற்ற பாசமும், அன்பும் வைத்திருந்தார். கவிராயருக்கு வந்த வாய்ப்புகள் பலவற்றை அவர் ஏற்க மறுத்த சந்தர்ப்பங்களில், "இதற்கு பொருத்தமானவர் மருதகாசிதான். அவரை எழுதச் சொல்லுங்கள்'' என்று கூறி மருதகாசியிடம் அனுப்பி தனது பாசத்தை வெளிப்படுத்துவாராம். தன் அண்ணன் போலவும், குருவுக்கு சமமாகவும் உடுமலை நாராயணகவியை மதித்தார்.

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

### கண்ணதாசனோடு:

மருதகாசியை பார்த்துதான் நானே பாடல் எழுத கற்றுக்கொண்டேன் — கவிஞர் கண்ணதாசன். கண்ணதாசனுக்கு வரிகள் எழுத முடியாத பாடலை கவிஞர் மருதகாசி எழுதி கொடுத்தாராம். படம் : மன்னாதி மன்னன்; பாடல் : 'ஆடாத மனமும் உண்டோ' .

### வாலியோடு:

என்னை தாய்போல ஆதரித்தவர் மருதகாசி - வாலி.

'நல்லவன் வாழ்வான்' படத்தில் எழுதிய பாடலை 6,7முறை மாற்றம் செய்து எழுத சொன்னதும், ஒருகட்டத்தில் அலுத்துப் போய் பாடலைஎழுதாமலிருக்க முடிவு செய்கிறார் கவிஞர் வாலி. இப்பாடலை எழுத மருதகாசி அழைக்கப்படுகிறார். பாடல் எழுதப் போகிறவரை கவிஞர் வாலி இந்த பாடலை ஏற்கனவே எழுதியுள்ளார் என்பது தெரியாது. ஏற்கனவே வாலி எழுதியவரிகளை பார்த்துவிட்டு "வாலி எழுதியது ஆகச் சிறந்த வரிகளாக உள்ளது. வாலியை வைத்தே இப்பாடலை எழுதுங்கள்" என்று கூறிவிட்டு அந்த பாடலை எழுதாமல் கொடிகட்டி பரந்த காலத்தில் கவிஞர் வாலிக்கு வழிவிட்டு சென்றவர் மருதகாசி.

### கடனிலிருந்து மீட்ட எம்.ஜி.ஆர்

"அல்லி பெற்ற பிள்ளை"என்ற சொந்தப் படம் எடுத்து அது தோல்வியில் முடிந்ததால், சம்பாதித்ததை எல்லாம் இழந்து கடன் தொல்லையால், வெளிப்படங்களுக்கு பாடல் எழுத முடியாத நிலை ஏற்பட்டது.

கட்டுரை

1963-ல் இருந்து 1967 வரை சென்னை வீட்டை காலி செய்துவிட்டு சொந்த ஊருக்கே சென்றுவிட்டார்.

கவிஞர் கடன் தொல்லையால் அவதிப்படுவதை கேள்விப்பட்ட எம்.ஜி.ஆர். 'மறுபிறவி' படத்திற்கு பாடல் எழுத அழைத்தார். அந்த படம் பாதியில் நின்றுவிட்டதால், அதற்கு பதிலாக, 'தேர்த் திருவிழா' படத்தை தேவர் தயாரித்து அந்தப் படத்தின் எல்லாப் பாடல்களையும் மருதகாசியே எழுதி கடன்தொல்லையிலிருந்து எம்.ஜி.ஆர். மீட்டார்.

**மருதகாசின் 'மதுர' பாடல்கள் சில:**

- சத்தியமே லட்சியமாய்க் கொள்ளடா (நீலமலைத்திருடன்)
- ஆளை ஆளைப் பார்க்கிறார் (ரத்தக்கண்ணீர்)
- சமரசம் உலாவும் இடமே (ரம்பையின்காதல்) (1939)
- சிரிப்பு... இதன் சிறப்பைச் சீர்தூக்கிப் பார்ப்பதே நம் பொறுப்பு (ராஜாராணி)
- ஏர்முனைக்கு நேர் இங்கு எதுவுமே இல்லே (பிள்ளைக்கனியமுது)
- கடவுள் என்னும் முதலாளி (விவசாயி)
- முல்லைமலர் மேலே மொய்க்கும் வண்டுபோல (உத்தமபுத்திரன்)
- காவியமா? நெஞ்சின் ஓவியமா? (பாவைவிளக்கு)
- பருத்தி எடுக்கையில என்னை பலநாளா(ஆட்டுக்காரஅலமேலு)
- கண்ணை நம்பாதே உன்னை ஏமாற்றும் (நினைத்ததைமுடிப்பவன்)
- வாராய் நீ வாராய் (மந்திரிகுமாரி)
- உலவும் தென்றல் காற்றினிலே (மந்திரிகுமாரி)
- சித்தாடை கட்டிக்கிட்டு (வண்ணக்கிளி)
- என்னை விட்டு ஓடிப்போக முடியுமா (குமுதம்)
- மாமா மாமா ஏம்மா ஏம்மா (குமுதம்)
- ஆயிரம் கண் போதாது (வண்ணக்கிளியே)
- அடிக்கிறகைதான் அணைக்கும் (வண்ணக்கிளி)

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

**மருதகாசின் ‘மதுர’ பாடல்கள் சில:**

- மனுஷன மனுஷன் சாப்பிடுறாண்டா தம்பிபையலே (தாய்க்குபின்தாரம்)
- மணப்பாறை மாடுகட்டி (மக்களைப்பெற்றமகராசி)
- ‘மாசிலா உண்மைக்காதலே (அலிபாபாவும்நாற்பதுதிருடர்களும்)

விவசாயம் பற்றிய 27 பாடல்களில் 17 பாடல்கள் மருதகாசி எழுதிய பாடல்களாகும்.

**சமரசம் உலாவும் இடமே:**

1949 ஆம் ஆண்டு முதல் 1989 வரை, தமிழ் படங்களில் அதிகமான பாடல்களை எழுதி தமிழ்திரையுலகில் 40 ஆண்டுகளுக்கு மேல் முன்னணி பாடலாசிரியராகத் திகழ்ந்த, ‘திரைக் கவித் திலகம்’ கவிஞர் மருதகாசி, 1989 நவம்பர் 29ஆம் நாளன்று தனது 69ம் வயதில் சமரசம் உலாவும் இடத்தை நோக்கிப் பயணித்து மறைந்தார்.

தன் வரிகளை வெறும் வார்த்தைகளால் மட்டும் நிரப்பாமல், விவசாயிகளின் வேர் வரையிலான உணர்வுகளையும் கொட்டி நிரப்பியதன் மூலம், இன்றளவிலும் விவசாயக் கவிஞராக மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.



திரு. அ. வில்சன், இதழாசிரியர்

நாளை

# நமதே

சவால்கள் இல்லையென்றால்
வாழ்க்கையில் நீங்கள்
முன்னேறவில்லை
என்றுதான் அர்த்தம்

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை


தொடர்பிற்கு :

9597887847
8870884969




# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com